4. கவன ஈர்ப்பு

அ கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சிஒன்றியங்களில்வேளாண்மை விரிவாக்க மைய அதிகாரிகளுக்கு சம்பளம் வழங்குவதில் தாமதம்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கோயம்புத்தூர் மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன்களில் பணிபுரிய அனுப்பப்பட்ட வேளாண்மை விரிவாக்க மைய அதிகாரிகள் 300 பேருக்கு மார்ச் மாதத்திற்கான சம்பளம் இன்னும் வழங்கப்படாதது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரக் குறிப்பு ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

1—3—1989 ஆம் தேதியிட்ட ஊரக வளர்ச்சித் துறை அரசாணை எண். 164-ல், வேளாண்மைத் துறையைச் சார்ந்த விரிவாக்க அலுவலகத்தில் பணியாற்றிய பணியாளர்களை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் இணைத்து, அவர்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையரின்கீழ் பணியாற்ற வேண்டுமென ஆணையிடப்பட்டது. இவ்வாணை 1—3—1989 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

2. இவ்வாறு மாற்றப்பட்ட பணியாளர்களுக்கு, ஊரக வளர்ச்சி ஆணையாளரால் மாற்று எற்பாடு செய்யும்வரை, வேளாண்மைத் துறை நிதி ஒதுக்கீட்டிலிருந்து சம்பளம், மற்றுமுள்ள செலவுகள் தொடர்ந்து பெறவேண்டுமெனவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கிடையில், 1989 ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்திற்கான மேற்படி பணியாளர்களின் சம்பளப் பட்டியலை அந்தந்த ஒன்றிய ஆணையாளர்கள் கருவூலத்தில் அளிக்கும்போது, அனுமதிக்குமாறு எல்லா மாவட்ட கருவூல அதிகாரிகளுக்கும், 19—4—1989 நாளிட்ட வேளாண்மைத் துறை கடித எண். 25747-ப.தொ. 89-1-ல் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

3. இது குறித்து, கூடுதல் வேளாண்மை இயக்குநர் மேலும் சில விவரங்களைத் தெரிவித்துள்ளார். வேளாண்மைத் துறை பணியாளர்கள் அரசு ஆணை எண். 164 (ஊ.வ. துறை), நாள்: 1—3—1989-க்கிணங்க 23—3—1989-லிருந்து 31—3—1989 வரை ஊராட்சி ஒன்றியங்களில் பணியில் சேர்ந்தனர். இப்பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்ட பின்னரே, அவர்களது ''இறுதி ஊதியச் சான்றிதழ்'' வழங்க இயலும். இச்சான்றிதழே அவர்கள் ஊதியம் பெற வகை செய்யும். இந்த இறுதி ஊதியச் சான்றிதழ், ஏப்ரல் மாத முதல் வாரத்தில் வேளாண்மை உதவி இயக்குநரால் தயார் செய்யப்பட்டு, அந்த அந்த ஊராக ஒன்றியங்களுக்கும் அனுப்பப்பட்டது. கோவை மாவட்டத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களில், பணி புரியும் வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு, மார்ச் மாதத்திற்கான ஊதியம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது என்று, கூடுதல் வேளாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. கீழ்க்கண்ட வட்டார வளர்ச்சி அலுவலகங்களில், (கோவை மாவட்டம்) வேளாண்மைத் துறையைச் சார்ந்த மாற்றப்பட்ட பணியாளர்களுக்கு, ஊதியம் பெற்று வழங்கிய விவரம் பின் வருமாறு.—

வட்டார வளர்ச்சி அலுவலகம்:

1	பேரூர்	10–4–1989 மற்றும் 20–4–1989-ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
2	தொண்டாமுத்தூர்	10–4–1989 மற்றும் 21–4–1989-ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
3	மதுக்கரை ..	11–4–1989 மற்றும் 18–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
4	சர்க்கார் சாமக்குளம். :	10–4–1989 மற்றும் 12–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5	பெரியநாயக்கன் பாளையம்.	10–4–1989 மற்றும் 13–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
6	அன்னூர்	12–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
7	காரமடை	13–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
8	அவிநாசி	10–4–1989 மற்றும் 17–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
9	சூலூர்	20–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
10	கிணத்துக்கடவு ..	10–4–1989 மற்றும் 17–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
11	சுல்த்தான்பேட்டை.	17–4–1989-ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
12	குடிமங்கலம் ..	11–4–1989, மற்றும் 17–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
13	ஆனைமலை ..	11–4–1989 மற்றும் 21–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.
14	பொள்ளாச்சி (வடக்கு)	20–4–1989ல் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.
15	பொள்ளாச்சி (தெற்கு).	20–4–1989ல் ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.
16	உடுமலைப்பேட்டை	21–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

17 மடத்துக்குளம் .. 21–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

18 திருப்பூர் .. .. 13–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கபடட்டுள்ளது.

19 பொங்கலூர் .. 17–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

20 பல்லடம் .. .. 20–4–1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் தங்களிடம் எழுதிக் கொடுக்கப்பட்டபோது அந்த சம்பந்தபபட்ட அதிகாரி களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. இப்போது எடுத்துக் கொள்ளப்படுகிற போது விவர அறிக்கையில் சமபளம் கொடுக் கப்பட்டதாக சொல்லப்படுகிறது. எனவே சம்பளம் கொடுப் பதில் இருக்கக் கூடிய கால தாமதத்தைத் தவிர்த்து, இதுபோன்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்களை இனி கொண்டு வருவதையும் தவிர்க்கின்ற விதததிலே, அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே உள்ளாட்சித்துறை மூலம் ஒரு ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டு, அதற்குப் பிறகு அதை ஏற்றுக் கொண்டு, சம்பளம் நாம் வழங்குவதா, அல்லது அந்தத் துறை வழங்குவதா என்று இரண்டு துறையுமே பரிசீலித்துக் கொண் டிருந்த காரணத்தால் சற்று கால தாமதம் ஆகிவிட்டது. இடை யில் 21 ஆம் தேதி எல்லோருக்குமே அந்தச் சம்பளம் வழங்கப பட்டு விட்டது. எனவே ஏறத்தாழ 20 நாட்கள் கால தாமத மானது. இனிமேல் அது தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொளகிறேன்.

(ஆ) நன்னிலம் மருத்துவமனையில் தண்ணீர் தொட்டி இன்மையாலும் போதுமான மருத்துவர்கள் இன்மையாலும் எற்பட்டுள்ள இடர்பாடுகள்

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், நன்னிலம் மருத்துவமனையில் ஆறு மருத்துவர் பணியாற்றிய நிலையில் இன்று பெண் மருத்து